




புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கொத்தமங்கலம் கிராமத்தில், மாநிலங்களவை உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினை, மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 28.07.2024 அன்று திறந்து வைத்தார்கள். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (அறந்தாங்கி) மரு.நமச்சிவாயம், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நாகை புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் நாகை மண்டலத்தில்11 புதிய பேருந்துகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகாஷ், நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் முகமதுஷாநவாஸ், நாகைமாலி, நாகை நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஷ்வரிசங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

### நீலகிரி மாவட்டத்தில்

# 20,000 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா சீருடைகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

நீலகிரி, ஆக.2-

நீலகிரி மாவட்டத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், பள்ளிமாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்து, மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகளை வழங்கினார்.

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், தொட்டபெட்டா ஊராட்சி, ஒடைக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகளை வழங்கினார். 2004 மாணவர்களுக்கு சீருடை வழங்கல் பட்டுள்ளதாக அப்போது அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதனை மிகவும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளிக்கல்வித்துறைக்கு கூடுதல் கவனம் செலுத்தி, அதிக நிதி ஒதுக்கி, வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் இல்லம் தேடிக் கல்வி திட்டம், காலை உணவுத்திட்டம், நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயிலும் மாணவியர்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் உதவித் தொகை, மாணவர்களும் பயன்பெறும் வகையில் அரசால் துவங்கப்படவுள்ள தமிழ் புதல்வன் திட்டம், படித்து முடித்து வேலைநாடுநோர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தி தருதல் போன்ற எண்ணற்ற அறிவிப்புகள், திட்டங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில், காலை உணவுத்திட்டத்தை பொறுத்தவரை 316 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 11,164 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகிறார்கள். புதுமை பெண் திட்டத்தின்கீழ் நமது மாவட்டத்தில் 1,067 மாணவியர்கள் மாதந்தோறும் ரூ.1,000 - பெற்று பயன்பெற்று வருகிறார்கள். பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் விலையில்லா சீருடைகள் சரியான முறையில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழ்நாடு



அரசு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் விலையில்லா சீருடை 2024-2025 கல்வியாண்டில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவ, மாணவியர்களுக்கும் வருடத்திற்கு நான்கு இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. சீருடைகள் மாணாக்கர்களுக்கு சரியான முறையில் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், இம்முறை தைக்கப்பட்ட சீருடைகள் நேரடியாக பள்ளிகளுக்கு சென்று சமூகநலத்துறையின் கீழ் செயல்படும் மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் விநியோகம் செய்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நமது மாவட்டத்தில் உள்ள 522 பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 6,830 மாணவர்களும், 6,792 மாணவியர்களும், 6 முதல் 8ம் வகுப்பு வரை 3,304 மாணவர்களும் மற்றும் 3,116 மாணவியர்களும் என மொத்தம் 20,042 மாணாக்கர்கள் விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ளனர். அரசு பள்ளிகளில் கல்வி கற்றலும், உட்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் பல அரசு பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் 100 விழுக்காடு தேர்ச்சி விகிதம் பெற்றுள்ளார்கள். எனவே பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்க முன்வரவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. கீதா, மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, உதகை வட்டாட்சியர் சரவணகுமார், உதகை நகரமன்றத்தலைவர் திருமதி. வாணீஸ்வரி, உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன்(எ) மாதன், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை, திட்டக் குழு உறுப்பினர் ஜார்ஜ், ஒடைக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி. ஷோபா, தொழிற்கூட்டுறவு அலுவலர் சுப்பிரமணி, தொழிற்கூட்டுறவு மேற்பார்வையாளர் கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்

# டாக்டர் வை.முத்துராஜா தந்தை பேராசிரியர் கே.வைரக்கண்ணு மறைவு!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கே.ஆர்.பெரியகருப்பன், சிவ.வீ.மெய்யநாதன் அஞ்சலி!

புதுக்கோட்டை, ஆக. 2-

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும்,கழக மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளருமான டாக்டர் வை. முத்துராஜாவின் தந்தையாரும், அரசினர் மாட்சிமை தாங்கிய மன்னர் கலை கல்லூரியின் முன்னாள் பேராசிரியருமான கே.வைரக்கண்ணு (வயது 86) அவர்கள் வயது முதிர்வின் காரணமாக 30.7.2024 அன்று காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ. அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் கூறினார்கள்.

மேலும், டாக்டர் வை. முத்துராஜா எம்எல்ஏ, இல்லம்", நெ.6001, ஜெ.என். நகர், அன்னசத்திரம், (அரிமளம் ரோடு) புதுக்கோட்டையில் வைக்கப்பட்ட அவரது தந்தையார் உடலுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுசூழல் காலம் நிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன்,இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., அசோக்குமார் எம்.எல்.ஏ., ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சின்னத்துரை எம்.எல்.ஏ., மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன்,மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் த.சந்திரசேகர், மாவட்ட ஆட்சியர் எம்.அருணா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் லியாகத் அலி, மாநகர செயலாளர் ஆ.செந்தில், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் ஆகியோர் நேரில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மேலும், மாவட்ட, ஊராட்சி குழு தலைவர் ஜெயலெட்சுமிதமிழ்செல்வன்,மாவட்ட துணை செயலாளர்கள் பெ.ராஜெஸ்வரி, ஞான.இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் என்.சாத்தையா, தலைவர் ஆர்.ரத்தினவேல், புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய செயலாளர்கள் மு.க.ராமகிருஷ்ணன், சுவாமிநாதன், தவ.பாஞ்சாலன், முத்துகிருஷ்ணன், கே.எஸ். சந்திரன், ஆர்ஆர்எஸ்.மாரிமுத்து, சத்தியசீலன், ஒ.எஸ். வி. வெங்கடாசலம், கே.பி. கே.டி.தங்கமணி, அரு.வடிவேலு, பா.குமார், சக்தி. ராமசாமி, அழகு.சிதம்பரம், ஒன்றிய பெருந்தலைவர்கள் கே.ஆர்.என்.போஸ், மாலா ராஜேந்திரதுரை, மேகலா முத்து, அரசு பொது வழக்கறிஞர் பா.வெங்கடேசன், அரசு கூடுதல் வழக்கறிஞர் ரமேஷ், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய ஆலோசனைக்குழு உறுப்பினர் ஏ.கே.செல்வம், வடக்கு மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் மு.க.முத்துகருப்பன், தெற்கு மாவட்ட மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் ஆர்.கண்ணதாசன், பிஆர்ஒ.பா.சக்திவேல், டாக்டர் எஸ்.நசீம், ஆசிரியர் ஆர்.நெடுஞ்செழியன், ஆசிரியர்,க.காந்தி, மற்றும், சட்டமன்ற உறுப்பினர்களும்,,கழக மாநில, புதுக்கோட்டை வடக்கு,தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகளும், ஒன்றிய கழக நிர்வாகிகளும், அனைத்து அணி நிர்வாகிகளும், வட்ட கழக நிர்வாகிகளும், மாமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சி பிரதிநிதிகளும், அனைத்து கட்சி பிரமுகர்களும், பொதுமக்களும் அன்னாரது உடலுக்கு, மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

1.8.2024 வியாழன் கிழமை மாலை 3 மணிக்கு இறுதி ஊர்வலமாக புறப்பட்டு, போஸ் நகர் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த பேராசிரியர் கே.வைரக்கண்ணுக்கு வை.கணபதி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. ஆகிய இரண்டு மகன்களும், வை.திலகவதி, வை.சுமதி ஆகிய இரண்டு மகள்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில்

# மண்டல அளவிலான இளைஞரணி சமூக வலைதள பயிற்சிக் கூட்டம்!

## ஒய்.பிரகாஷ் - தே.மதியழகன் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஆக. 2-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது ஆலோசனைப்படி திமுக இளைஞரணி மண்டலம் 3, மற்றும் 4 மண்டலங்களுக்கான மாநில, மாவட்ட, மாநகர, அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தள பயிற்சி முகாம் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் குந்தாரப்பள்ளியில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்டச் செயலாளர்கள் பிரகாஷ் எம்.எல்.ஏ., மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோரது தலைமையில் நடைபெற்ற இந்த சமூக வலைத்தள பயிற்சி கூட்டத்தில் மாநில இளைஞரணி செயலாளர்கள் சீனிவாசன், பிரபு கஜேந்திரன், முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் உரையாற்றும் பொழுது கழகத் தலைவர் தமிழக முதல்வர் மக்களின் நலன் கருதி பல உன்னத திட்டங்களை வழங்கியுள்ளார். தமிழ்நாட்டின் 8 கோடி மக்களின் வளர்ச்சி, உ.பி.,யின் 24 கோடி மக்களின் வளர்ச்சிக்கு இணையாக உள்ளது. தமிழ்நாடு சாலை, சுகாதாரம், கல்வி என அனைத்து துறைகளிலும் நாட்டில் முதலிடம் பெற்றுள்ளது.

இதை ஏற்றுக்கொள்ள முடியாத சிலர், இந்த ஆட்சி குறித்து சமூக வலைதளங்களில் கொச்சைபடுத்தி வருகின்றனர். அவர்களை நாம் ஒன்றிணைந்து சேர்ந்து தடுக்க வேண்டும். அந்த பொறுப்பை இளைஞரணியிடம் இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தந்துள்ளார்.

இவ்வாறு அவர் பேசினார் இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ் உரையாற்றும் போது நான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் , கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் , இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான சின்னவர் காலங்களில் எம்.எல்.ஏ.,வாக இருந்து விட்டேன். அதே போல் நீங்களும் அடுத்த மூன்று தலைவர்களுடன் எம்.எல்.ஏ.,க்களாக இருக்க வேண்டும். நம்மை பற்றி சமூக வலைதளம் எனும் போர்களத்தில் போரில் எதிரிகளை வீழத்துவது போல் இழிவாக பேசியவர்களை அடக்கி, தக்க பதிலடி கொடுப்பது போல் லோக்சபாவில் 40க்கு 40 பெற்றது போல், சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெல்லும் வகையில் சமூக வலைதளங்களை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து சமூக வலைதள பயிற்சியாளர்கள் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, இளமாறன், யுவ கிருஷ்ணா ஆகியோர் இளைஞரணி நிர்வாகிகளுக்கு சமூக வலைதள பயிற்சிகளை அளித்தனர். கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ்ராஜன் நன்றி கூறினார். மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

### நலிந்த பிரிவினர் - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - எஸ்.சி. - எஸ்.டி. பிரிவு

# தொழில் முனைவோர்க்கு எளிதாக நிதியுதவி கிடைக்க ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா?

## மாநிலங்களவையில் - மு.சண்முகம் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக.2-

மாநிலங்களவையில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளருமான மு.சண்முகம் எழுப்பிய கேள்வி வருமாறு:

நலிந்த பிரிவினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், எஸ்.சி. மற்றும் எஸ்.டி. பிரிவினர் ஆகிய தொழில் முனைவோர்க்கு எளிதாக நிதியுதவி கிடைப்பது குறித்து அரசு ஏதேனும் மறு ஆய்வு செய்திருக்கிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

நிதியைப் பெறுவதில் தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு கடன் வழங்குவதற்கான அளவுகோல்கள் எளிமை



யாக்கப்பட்டு வங்கிகளின் சுற்றுச்சூழல் அமைப்பு பலப்படுத்தப்படுமா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு ஒன்றிய அரசின் நிதி இணையமைச்சர் ஸ்ரீபங்கஜ் சௌத்திரி அளித்த பதில் வருமாறு:

கட்டுப்பாடற்ற கடன் சூழலில், கடன் வசதிகள் தனிப்பட்ட வங்கி வாரியங்களின் அங்கீகரிக்கப்பட்ட கடன் கொள்கைகள் ஆகியவை ரிசர்வ் வங்கியின் (RBI) தற்போதைய வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

அனைத்து கடன்களுடன் இணைக்கப்பட்ட திட்டங்களையும் அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதி (SC) மற்றும் பழங்குடியினர் (ST) ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள், பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த தொழில்முனைவோருக்கு எளிதாக நிதியுதவி கிடைப்பதை எளிதாக்கும் வகையில் பல முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

அவற்றில் சில 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் தேதி ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் (SUPI) தொடங்கப்பட்டது, இதன் மூலம் உற்பத்தி, சேவைகள் அல்லது வர்த்தகத் துறை மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய செயல்பாடுகளுக்கு ஒரு கிரீன்ஃபீல்ட் நிறுவனத்தை அமைப்பதற்காக ஒரு வங்கிக் கிளையில் குறைந்த பட்சம் ஒரு பட்டியல் சாதி (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மற்றும் ஒரு பெண் கடன் வாங்குபவருக்கு ரூ.10 லட்சம் மற்றும் ரூ.1 கோடி வரை வழங்கப்படுகிறது.

2019-20 யூனியன் பட்ஜெட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், இந்தத் திட்டம் 2025 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது.

2015 ஆம் வருடம் ஏப்ரல் 8 ஆம் தேதி அன்று தொடங்கப்பட்ட பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) கீழ் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், எஸ்சி மற்றும் எஸ்டி பிரிவைச் சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கு பிணையில்லாமல் தங்கள் வணிக நடவடிக்கைகளை அமைக்க அல்லது விரிவாக்க 10 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது.

மேலும், ஆர்பிஐ முன்னுரிமைத் துறை கடன் வழங்குதல் (பிஎஸ்எல்) வழிகாட்டுதல்களை வடிவமைத்துள்ளது, இது கடன் தகுதியுடையதாக இருந்தாலும், வங்கி அமைப்பில் இருந்து போதுமான கடன் கிடைக்காத பிரிவுகளுக்கு கடன் வழங்குவதை எளிதாக்குகிறது. ஆர்பிஐ 40% சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கிரெடிட் (ANBC) அல்லது பி.எஸ்.எல்.லுக்கான ஆஃப்-பேலன்ஸ் ஷீட் எக்ஸ்போஷர்களுக்கு (CEOBE) சமமான கிரெடிட் இலக்கை நிர்ணயித்துள்ளது.

இதில் 12% தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு கடன் வழங்க கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது, இதில் பட்டியல் சாதியினர் (எஸ்சி) மற்றும் பழங்குடியினர் (எஸ்டி), சிறு மற்றும் குறு விவசாயிகள், கைவினைஞர்கள், பயனாளிகள் ஆகியோர் அடங்குவர். NRLM/ NULM, SHGகள், சிறுபான்மை சமூகங்கள் போன்றவை.

ரிசர்வ் வங்கியின் தகவலின்படி, 2023-24 நிதியாண்டில் பலவீனமான பிரிவினருக்கான முன்னுரிமை துறை கடன் (பிஎஸ்எல்) கீழ் 13.53% சாதனை படைத்துள்ளது.

மத்திய அல்லது மாநில அரசால் அவ்வப்போது வகுக்கப்பட்ட திட்ட வழிகாட்டுதல்களின்படி, அனைத்து வங்கிகளும் பட்டியல் சாதியினரின் கடன் வாங்குபவர்களுக்கு சலுகைக் கடன்களை வழங்குகின்றன.

இவ்வாறு ஒன்றிய அரசின் நிதி இணையமைச்சர் ஸ்ரீபங்கஜ் சௌத்திரி பதிலளித்துள்ளார்.



தமிழ்நாடு முதல்வர் அவர்களால் காணொலியில் திறப்புவிழா கண்ட கொரடாச் சேரியில் அரசு அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் குத்துவிளக்கேற்றினார்.மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலிய பெருமாள், ஒன்றியக்குழு தலைவர் உமாப்ரியா, துணைத்தலைவர் ஆர்.பாலச்சந்திரன் மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக்,பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், ஒன்றியக்குழுத் தலைவர்கள் சோம.செந்தமிழ்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, பால.ஞானவேல், இரா.மனோகரன், ஐ.வி.குமரேசன், நகர செயலாளர்கள் வாரை.எஸ். பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பூண்டி.கே.கலைவேந்தன் மற்றும் அரசு அதிகாரிகளும் உடன் இருந்தனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டம், வீரபாண்டி பகுதி 54வது வட்டம் வஞ்சி நகர் அடுக்குமாடி குடியிருப்பு பகுதி மக்களிடம் அடிப்படை தேவைகளான சாலை, குடிநீர், தெருவிளக்கு, பேருந்து ஆகிய சேவைகள் குறித்து மாவட்டக் கழகச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ் கேட்டறிந்து ஆய்வு செய்தார். இந்நிகழ்வில், தெற்கு மாநகர செயலாளர்கள் திருப்பூர் தெற்கு டி.கே.டி.மு.நாகராசன், திருப்பூர் வடக்கு, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், பகுதி கழக செயலாளர்கள் கோவிந்தராஜ், மு.க.உசேன், வடக்கு மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் அருணாச்சலம், சுகாதார குழுத்தலைவர் கவிதா நேதாஜிகண்ணன் உள்பட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.